# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/3 - 2018 පෙබරවාරි මස 19 වැනි සඳුදා - 2018.02.19

2059/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: KEG/LAN/AQUIS/A3/1/105.

காணி அமைச்சின் கோவை இல.: 4-3/15/2016/VE/238.

கேகலை பிரதேச செயலாளர் பிரிவில் 2016 ஆம் வருடத்தில் மண்சரிவின் மூலம் அகதிகலான மக்களை மீளக்குடியேற்றுவதற்காக காணி எடுத்தல். பாரம்பே பிரிவு எனும் காணி இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு களை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியுள்ளதனால் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் படி இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

**எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 57 பி பொஸ்ஸெல்ல கிராம அலுவலர் பிரிவில் பாரம்பே கிராமத்தினுள் அமைந்துள்ள கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ.வ.கே 3562 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 காணித்துண்டாகும்.

நட்டஈட்டு உரித்தின் பரிசீலனைத் திகதி :

ஆ.வ.கே. 3562 வரைபடத்தில் கே. இலக்கம் 01 இற்காக 2018.03.20 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரித்து, உரிமை அல்லது வேறு எவையேனும் தொடர்புகள் கொண்ட அனைவரும் தத்தமது அல்லது அவர்களின் ஆவணங்கள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் குறித்த நேரத்தில் கேகாலை பிரதேச செயலகத்தில் என்னை சந்தித்தல் வேண்டும்.

1A - G 27134 - 32 (2018/02)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், 06.03.2018 ஆம் திகதிக்கு முன் குறித்த காணி சம்பந்தமாக அவர்களின் உரித்துக்களின் தன்மைகள், குறித்த காணியைப் பெற்றுக்கொள்வதற்காக நட்டஈடு வேண்டுவதற்கு இருக்கின்ற விடயங்கள் சம்பந்தமான விபரங்களையும், நட்டஈட்டுத்தொகை மற்றும் அத்தொகையினைக் கணக்கிட்டவிதம் போன்றவற்றினையும் இரண்டு பிரதிகள் கொண்ட பத்திரம் மூலம் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

எச். டீ. ஆர். நாலிகா பியசேன,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2018, பெப்புருவரி 14.

அட்டவணை

**ஆ.வ.ப.கே 3562 வரைபடம்**

**துண்டு இலக்கம் : 01**

காணியின் பெயர்: பாரம்பேதோட்டம் (பாரம்பே பிரிவு); உரித்து கோருவோரின் பெயர் மற்றும் முகவரி: (1). காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,
கொழும்பு.
(2). முகாமைத்துவப் பணிப்பாளர்,
கேகாலை பெருந்தோட்டக் கம்பனி,
இல. 310, ஹய்லெவல் வீதி, நாவின்ன,
மஹரகம;
விஸ்தீரணம்: 2.6295 ஹெக்டயார்.

3-209